நீ இல்லை என்று சொல்ல
நெஞ்சம் இல்லை எமக்கு...



வீரவேங்கை

# முரசொலி

தர்மதுரை - அரிகரன்

கொத்தம்பியாகுளம் - துணுக்காய்

அவர்களின்

# நினைவுமலர்

19-08-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயின் மடியில் | தாயக மடியில்
03-10-1984 | 10-07-2007

**வீரவேங்கை - முரசொலி**

**தர்மதுரை - அரிகரன்**





**சமர்ப்பணம்**

எல்லோர்க்கும் நல்லவராய்
அன்புடனும் பண்புடனும்
பணிவுடனும் புன்சிரிப்புடனும்
இனிமையாக எல்லோருடனும் பழகி
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் ஆருயிர்ச் செல்வம்
அரிகரனின் இனிய நினைவுகளை
எங்கள் இதயங்களில் சுமந்த வண்ணம்
இம்மலரை அவர்தம் மலரடிக்கு
சமர்ப்பணம் செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமாக நீ இருந்தாய்



நேற்றுவரை எம்மோடிருந்த
என் அன்புத் தம்பியே – உனக்காக
நான் எதை நினைக்க
எதை எழுத
வார்த்தைகள் எவையும்
வர மறுக்கிறதே-உனை
நினைக்க எம் கண்கள்
கண்ணீரை மட்டும்
தானாகச்சொரிகின்றது.
என் அன்புத் தம்பியே
என்னை நீ அக்கா என்றோ
உன்னை நான் தம்பி என்றோ
என்றுமே அழைத்ததில்லையடா.
அதனால் தான் எனக்கு
எல்லாமாக நீயிருந்தாய்
எதை எனக்கு நீ செய்யவில்லை
என எண்ணிப்பார்க்கிறேன்
ஒன்றுமே இல்லையடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதுதான் விதியென

எல்லோரும் இலகுவாய்ச்சொன்னாலும்

உன்னை இழக்க எம்மால் முடியாதடா.

நீ மீண்டுமொரு பிறப்பெடுத்து

எம்முடன் வரும் வரை

பூமாலை கட்டத்தெரியாத நான்

தினமும் உனக்காக கண்ணீர்

மாலை கட்டியபடி

**உன் அக்கா**
**தேவிகா சுதாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடை காண முடியாமல்

கரன் எமை விட்டு

எங்கே போனாய்

சோகங்களை நாம்

கவிதைகளிலும் படங்களிலும்

மட்டுமே அனுபவித்தவர்கள்.

அதற்காக உன்னை இழந்தா நாம்

இழப்பின் வலிமையை

உணர்ந்து கொள்ள வேண்டும்

உனக்கு நான் Canada வரத்தானே

Sponcer செய்தேன்

அதற்கிடையில் ஆண்டவன் ஏன்

தன்னிடம் Sponcer செய்தான்.

விடைகாண முடியாமல் துடிக்கும்

*உன் அண்ணா*

*தர்மதுரை அமுதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிகரன் நீ எங்கள் சிரிகரன்



நிஜமொன்று நிழலானது
பாடமொன்று படமானது
பாசக் கூட்டுக்குள்
பறந்த பட்சியொன்று
பார்க்க முடியா இடம்
பறந்து போனது.....!!

அரிகரன் நீ எங்கள் சிரிகரன்
சிரிப்பாலே நீ சேர்த்த உறவுகள்
விருப்போடு பழகிய உள்ளங்கள்
மாரிகாணப் பயிர்கள் ஆனதடா-மீண்டும்
வருவாய் என்றே நம்பி வாடுதடா

கண்டது கேட்டதெல்லாம்
கனவாகிவிட வேண்டுமென்றே-உள்ளம்
மண்டாடுதடா...!!
தெத்திப்பல் தெரியச் சிரித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேருந்தில் வந்திறங்குவாயென்றே

சித்தத்தில் எண்ணம் தோன்றுதடா

மழை வரவில்லை என்றால்

மாதவம் செய்து கொணருவோம்

நிலம் வரவில்லை என்றால்

பலம் சேர்த்து கொணருவோம்

அரிகரனே நீ வரவில்லையடா.......!!

உன்னை மீண்டும் இங்கே கொண்டுவர

மாற்று வழி தெரியவில்லையடா....!!

*கொத்தம்பியாகுளம் மக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீ இல்லை என்று சொல்ல நெஞ்சமில்லை எமக்கு

கரன்,

எங்கள் எல்லோரினதும் செல்லப்பிள்ளை நீ. எல்லோர்க்கும் நல்லவனும் நீ தான். 23 வயதிலும் எங்கள் அம்மாவின் மடி மீதுதானே நீ படுப்பாய். ஞாயிற்றுக்கிழமை என்னுடன் Phone கதைத்து கிளிநொச்சி போய் எடுப்பேன் என்றாயே. உன் Phone ஐ எதிர்பார்த்திருந்த நான் எப்படி உன் செய்தியைத் தாங்குவேன் என நினைத்தாய். எனக்குத்தெரியும் ஒரு நாளும் விரும்பிப்போயிருக்க மாட்டாய். ஆனால் நீ எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் கவர்ந்தது போல் அந்த காலனையும் கவர்ந்து விட்டாய். அதனால் தான் உன்னையும் அவன் கவர்ந்து விட்டான். எங்களில் அம்மாவை அம்மா என அழைக்கும் அம்மாவின் செல்லப்பிள்ளை நீ தான். எங்கள் எல்லோரினதும் செல்லப்பிள்ளையும் நீ தானே. நீ கேட்டு எது தரவில்லை நாங்கள். ஆனால் நீ ஞாயிறு கேட்ட MP3 player உம் T Shirt உம் உனக்கு வாங்கித்தர சந்தர்ப்பமே தரவில்லையடா. நீ இல்லாமல் எல்லாம் இயல்பாய் நடக்கிறது. எங்களிற்குத்தான் நீ இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைவெளி யாராலும் நிரப்பவே முடியாது. நீ இல்லாத அந்த மூன்றரை மாதங்களை விரல் விட்டு எண்ணிய படி நகர்த்திய எங்களிற்கு நீ இல்லை என்று சொல்ல நெஞ்சமில்லை. ஆனாலும் இயற்கை விதியை மீறி ஏதோ ஒன்று உன் இருப்பை எம்முன் உறுதிப்படுத்துகிறது. உன் ஆத்மா சாந்தி அடைய மீண்டும் அந்தக் கடவுளையே வேண்டுகின்றோம்..

*உன் அக்கா*

*வனஜா சுபாஸ்கரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத துயர் எங்களுக்கு

ஆறாத்துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட என் அன்புச் சகோதரனே! மல்லாவி சென்ற உன்னை வாகனத்தில் அனுப்பி விட்டு நான்கு நாட்களுக்கு எவ்வாறு உன்னைப்பிரிந்து இருக்கப் போகின்றேன் என நினைத்துத்தானே கவலையில் ஆழ்ந்திருந்தேன். ஆனால் புறப்பட்டு அரை மணி நேரத்தில் வந்ததே பேரிடி. நீ எங்களை எல்லாம் விட்டு விட்டுப் போய்விட்டாய் என்று நினைக்க நெஞ்சு பொறுக்குதில்லையடா. நீ இனி என் கூட வரமாட்டாயா. பெரியம்மா பிள்ளையடா நீ எனக்கு. தம்பி உறவு. ஆனால் நாங்கள் இருவரும் உயிர் நண்பரடா. ஒன்றாய்ப் படித்தோம், ஒன்றாய்த் திரிந்தோம் எல்லாவற்றிலும் இருவரும் ஒன்றாகச் செயற்பட்டோம். இன்று நீ ஏன் என்னை தவிக்கவிட்டு மறைந்து போனாய்? குடும்பமே கதறுதடா. நீ இல்லால் போன செய்தி கேட்டு. யாரை யார் ஆற்றுவது இந்த மாநிலத்தில் எதுவும் உண்மையில்லை. கரன், உன் நாமம் என் நாவில் என்றும் உச்சரித்தபடியே இருக்குமடா. உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின்றேன்.

*மிகுந்த துயருடன்*

*வாகீசன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய ஓவியம்



குதூகலிக்கும் உன் பேச்சு
குற்றால அருவியாக குளிர்விக்கும்
குழிவிழும் உன் கன்னம்- கூடியிருப்போரை
கும்மாளம் அடிக்கவைக்கும்.

வஞ்சகமில்லா உன் பார்வை
வாஞ்சையுடன் எமை அரவணைக்கும்
வரையடா ஓவியம் எனைப்பார்த்து என்றாய்
வரைந்தேனடா- ஆனால் சாதாரண தூரிகையால் அல்ல
உன் நினைவு என்னும் வர்ணத்தால்
எண்ணம் என்னும் தூரிகையால் - அழியாது
என்றும் அழியாது உன் உருவம்
என் இதயம் இருக்கும் வரை- நீ
என் இதய ஓவியம்.

முரசொலி என்னும் நாமம் - எப்போதும்
முரசு கொட்டும் போர்ப்பறை
முடிக்காத உன் பணி- முடித்து வைப்பார்கள்
உன் தோழர்கள் - அதுவரை
நிம்மதியாய் நீயுறங்கு

**இ.யாழரசன்**
**சுகாதாரப்பிரிவு**
**(போராளி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாயகத்தின் விடிவிற்காய்

தலைவன் வழி நின்று
தடைகள் வெல்லவென்று
தாயகத்தின் விடிவிற்காய்
தானைத்தலைவன் பாதையில்
தனையும் ஓர் புதிய போராளியாய்
இணைத்து சாதனைகள் பல
படைக்கவென காத்திருந்த முரசொலியே
எங்கள் தோழனே

நட்பு என்ற மூன்றெழுத்தின் நாயகனே
தமிழீழத் தாயவளின் புத்திரனே
போய்வருகிறேன் என்றவனே
வருவாய் என எதிர்பார்த்திருந்தோம்
வந்ததோ சோகம் வாய்திறக்க முடியாமல்
நாம் அழுத காட்சியினை
வர்ணிக்க முடியாது.

புன்னகைச்சிரிப்பில் பூரித்தெழுந்த – பூவே
எமது நெஞ்சத்தில் நீங்காத
இடம் பிடித்த முரசே
நாட்கள் பல கடந்தும் நரைக்கவில்லை உன் நினைவு
நாயகனே உன் பாதை தனியாக
இருக்கவில்லை நிம்மதியாய் நீ உறங்கு
நிமிர்வோம் உன் பாதையில்

*நண்பன்*
*வித்தகன்*
*(மருத்துவப்பிரிவுப் போராளி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசொலியுடன் (கரன்) பழகிய சில காலம்

தர்மதுரை அரிகரன் என்பது இவனது முழுப் பெயர் நாம் அவனை செல்லமாக கரன் என்று அழைப்போம், வீட்டில் இவன் செல்லப்பிள்ளையும்கூட எப்பொழுதும் சிரித்த முகம், மெல்லிய அழகான உடல், எதையும் செய்யத்துடிக்கும் மனவுறுதி இவை இவனது குண இயல்புகள் இவனுடன் மிக நெருக்கமாக பழகுவதற்கு எனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

கரன் அவனை நினைக்கும் பொழுதெல்லாம் பள்ளிப் பருவத்தில் இவனோடு ஒரு கூட்டம் என்நேரமும் கலகலப்பாக அந்த வீதியால் சென்று வருவதை ஒவ்வொரு நாளும் காண்பேன். சந்தர்ப்பம் அவ் வீதி அருகில்த்தான் எமது முகாம் அமைந்திருந்தது. கரனும் அவனின் சில தோழர்களும் மல்லாவி மத்திய கல்லூரியில்தான் கல்வி பயிள்றனர் கல்லூரியின் அருகிலிருந்தவீடு ஒன்றில் மாலை ரீயூசன் முடித்துக்கொண்டு விளையாட்டுத் திடலுக்கு வந்தார்கள் அங்கே என்னுடன் சில நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள், அங்கேவந்த இவர்களின் கூட்டம் பல நகைச்சுவைகளைக் கூறி பம்பலடித்துக்கொண்டிருந்தார்கள் அவர்களில் ஒருவனாக இவன் எங்களைப் பார்த்துக் கேட்கின்றான் நாங்கள் வேறு பலருடன் விளையாடி பல வெற்றிகளையீட்டியிருக்கின்றோம் உங்களுடன் ஒரு போட்டி போடலாமா என்றுகேட்கிறான். மிகவும் நிதானமாகவும் உற்சாகமாகவும் விளையாடி எமை வெற்றிகொண்டான். அவன் விளையாட்டில் திமையானவன் என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். அந்தச் சந்தர்பபம்தான் அவனுடன் மிகவும் அன்பாகப் பழகினேன். அவனுக்கு பூப்பந்து விளையாடுவது என்றால் காணும் அதைவிட மகிழ்ச்சி ஏதும் கிடையாது என்றுதான்சொல்ல வேண்டும். நன்றாக விளையாடுவான் விளையாடும்பொழுது இவன் பேசும் நகைச்சவைகளும் குறும்புகளும் இனிமையானதும் மிகவும் மகிழ்ச்சிகரமானதும். ஆகும் இவற்றை என்னால் மறக்க முடியாததாகும்.

இவன் எமது விடுதலைப் போராட்டத்தையும் தேசியத் தலைவரையும் ஆழமாக நேசித்தவன். கரன் மாணவனாக இருக்கும் பொழுதே எமது தலைவர் பற்றியும் போராட்டம் பற்றியுமான வரலாற்றைற ஆழமாக அறிந்திருந்தான். எம்முடன் பேசும் பொழுதும் போராட்டம் பற்றியே மிக விருப்போடு கேட்டு அறிவான். பள்ளிப் பருவத்திலேயே மாணவர்படை, புலனாய்வு முகவர் என பல பணிகளை ஆற்றியிருந்தான். பள்ளியில் பல நிகழ்வுகளில் திறமையாக பங்குகொண்டு சான்றிதழ்களையும் பெற்றிருந்தான். பள்ளியில் என்னவொரு செயற்பாடாக இருப்பினும் கரனது பங்கும் பரந்திருக்கும்.

கரனின் துணிவைப் பார்த்த சந்தர்பம் ஓயாத அலை 3 இல் எம்மால் மீட்கப்பட்ட இடங்களை சமர் நடந்துகொண்டிருந்த வேளையில் கூட சற்றும் பதட்டம் ஏதும் இல்லாமல் பார்வையிட்டு வந்தான். இதுவும் கரன் எமது போராட்டத்தின் மேல் வைத்திருந்த பற்றுத்தான். கரனை தமிழீழத்தின் சில பகுதிகளை கூட்டிச்சென்று காட்டும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது அவனது முழுமையான விருப்பம் எமது தேசியத் தலைவர் பிறந்து வளர்ந்த அந்த வீர மண்ணையும், அவரது இல்லத்தையும் பர்வையிடவேண்டும் என்று. போய்ப் பார்த்தோம், கரனின் மகிழ்ச்சிக்கோ அளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரன் என்னுடன் உரையாடும்பொழுதெல்லாம் நான் தேசியத்தலைவரைப் பார்க்கவேண்டும் அவர் கைகளால் சான்றிதழ் ஏதும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூறுவான். சிறிது காலம் நான் வேறு இடம் சென்றிருந்தேன் கரனைச் சந்தித்தும் நீண்டநாட்களாகிவிட்டன பின்பு அவரின் உறவினர் ஒருவருடாக கரன் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துவிட்டதாக அறிந்தேன். அப்பொழுது நான் நினைத்தேன் கரன் பயிச்சிகளைப் பெற்று நன்றாகச் சாதிப்பான். அவனது ஆசைகளும் நிறைவேறும் என்று. கால நீரோட்டத்தில் சில மாதங்கள் கழித்து அவனை நான் ஒரு மருத்துவத்துறைப் போராளியாக முரசொலி என்ற பெயருடன் சந்த்தித்தேன். முரசொலி கூறுகிறான் அண்ணா நான் நிறையச் சாதிக்க வேண்டும். எனக்கு ஏற்ற துறை மருத்துவத்துறைதான் என்று மிக மிடுக்கோடு கூறினான் அவனின் மாற்றங்களைக் கண்ட நான் மகிழ்ந்தேன். பின் மீண்டும் என்னை ஒருமுறை சந்திப்பதற்காக எனது முகாம் வந்த பொழுது நான் அங்கு நிற்கவில்லை. பின் சில நாட்கள் கடந்தன (10.07.2007) அன்று எனக்கு நடைபேசி அழைப்பொன்று வந்தது. முரசொலி வீரச்சாவாம் விளக்கமாக கேட்ட பொழுது மருத்துவப் பணிக்காக சென்று கொண்டு இருந்த வேளை ஆழஊடுருவும் பிரிவினுடைய கிளை மோர்த்தாக்குதலில் முரசொலியும் வீரச்சாவடைந்து விட்டான். என்று கூறப்பட்டபொழுது. ஒரு நல்ல நண்பனை, திறமையான மருத்துவப் போராளியை இழந்துவிட்டோம் என்பதை என் இதயம் நம்பமறுத்தது. இதயம் வெடிக்குமாற்போலிருந்தது.

**"இழப்புக்களும் அழிவுகளும் எமது ஆண்மாவின் உறுதிக்கு உரமாகிவிட்டால் எந்த சக்தியாலும் எம்மை அழிக்கவோ அசைக்கவோ முடியாது"** இது எமது தேசியத்தலைவரின் சிந்தனை. இதன்பால் முரசொலியின் இழப்பையும் எமது ஆண்மாவின் உறுதிக்கு உரமாக்கி. எம் விடுதலைப் பயணத்தை தொடர்ந்து. எமது இலட்சியமான தமிழீழத்தாயகத்தை மீட்டெடுப்போம்.

- நன்றி -

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

**இவ்வண்ணம்**
**நண்பன் க.பூங்குன்றன் (போராளி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசர்நாய்க்கடி

மிருகங்களில் இருந்து மனிதனுக்குத் தொற்றும் நோய்களில் மிகவும் ஆபத்தானதும் உயிர்க்கொல்லி நோயாகவும் காணப்படுவது RABIES (றேபிஸ்) எனப்படும் நீர்வெறுப்பு நோயாகும். இது ஒரு வைரஸ் கிருமியினால் உருவாகும் நோயாகும். இந்நோய்க்கு மருந்துகள் கிடையாது என்பதால் இந்நோய் எமது உடலில் ஏற்படுவதனைத் தடுப்பதே சிறந்த வழியாகும்.

விலங்கின் உமிழ்நீரில் இந்நோய்க்கிருமிகள் காணப்படும். விலங்கு மனிதனைக் கடிக்கும்போது அல்லது மனிதனில் ஏற்கனவே உள்ளகாயங்களில் விலங்கின் உமிழ்நீரானது படும்போது இக்காயங்களினூடாக இந்நோய்க்கிருமிகள் மனிதனின் உடலினுள் செல்லுகின்றன.

முக்கியமாக மனித உடம்பினுள் நரம்புகளின் வழியாக மூளைக்குச் சென்று எமது நரம்பு மண்டலத்தையே தாக்கி நோயினது உக்கிர நிலையினை உருவாக்குகின்றது. குறிப்பாக தலைப்பகுதிக்கு (மூளைக்கு) அண்மையாக கழுத்து, முகம் போன்ற இடங்களில் விலங்கு கடிப்பின் நோயினது தாக்கமானது விரைவில் மூளைக்குச் சென்று வெளிக்காட்டும்.

ஒருவருக்கு விசர் விலங்கு கடித்ததில் இருந்து 9 நாட்கள் முதல் 90 நாட்கள் வரையான காலத்தினுள் நோய் ஏற்படலாம். எனினும் அரிதாக ஒரு வருடத்தின் பின்னரும் மனிதனில் நீர் வெறுப்பு நோய் ஏற்படலாம். பொதுவாக விலங்கு கடித்ததில் இருந்து அவ்விலங்கானது 10 நாட்கள் வரை உயிருடன் இருக்கின்றதா அல்லது இறந்துவிட்டதா என்பதனைக் கவனித்தல் வேண்டும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு இறக்கும்வரை காத்துக் கொண்டிருக்காது, விலங்கு கடித்தவுடன் மருத்துவரை அணுகவேண்டும்.

**முதல் உதவி**

விலங்குகடித்தவுடன் காயத்தை நீரினால் 05 -10 நிமிடங்கள் வரை சவர்க்காரம் இட்டு கழுவுதல் வேண்டும். இது மிகவும் முக்கியமான முதலுதவி முறையாகும். சவர்க்காரத்தினால் இக்கிருமி கொல்லப்பட்டுவிடும். பஞ்சு, துணி என்பன வற்றினால் காயத்தை ஒற்றுதல் தவிர்க்கப்படவேண்டும். ஒற்றுவதனால் கிருமி இரத்தத்தினுள் செல்ல அதிகவாய்ப்பு உண்டாகலாம். இதன்பின்பு உடனடியாக வைத்திய சாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

விலங்குகடித்த காயம் மேலோட்டமாகக் காணப்படின் ARV (Anti Rabies Vaccine) ஊசி போடப்படும். இதனுடன் குறிப்பாக ஏற்புத்தடை மருந்தும் ஏற்றப்படும். நாய் கடித்த அன்றும் பின்னர் 3ம் நாள், 7ம் நாள், 14ம் நாள், 28ம் நாள் என்ற ஒழுங்கில் ஊசி போடப்படுகின்றது. முழுமையான சிகிச்சை தவறின் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படலாம்.

குறிப்பாக வன்னிப்பிரதேசத்தைப் பொறுத்தவரை மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு பிரதேசம். விசர்நாய்க்கடிக்கு தடுப்பு மருந்து ஏற்றாதுவிடின் மரணம் நிச்சயம் என்பதனால் நாம் நாய்களை மற்றையோருக்கு இடையூறு இல்லாமல் வளர்க்கவும், நாய்கள் மூலம் ஏற்படும் காயங்களினை கூடுமானவரை தவிர்த்துக் கொள்வதும் மிக முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசர்நாய்க்கடி ஊசிமருந்து போடப்பட்ட ஒருவருக்கு அம் மருந்தானது எட்டு மாதங்கள் வரையுமே பாதுகாப்பாக இருக்கும். அதன்பின்பு நாய்கடிப்பின் திரும்பவும் ஊசி ஏற்றப்படல் வேண்டும்.

எமது சூழலில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் மிகவும் அதிகமாகவுள்ளது. பொது இடங்களான சந்தைகள், கழிவுகள் கொட்டும் நிலங்கள், இல்லங்கள், நிறுவனங்கள், முகாம்கள், கடைத்தெருக்கள் போன்ற சூழலில் இந்த நாய்கள் வளருகின்றன.

கட்டாக்காலி நாய்கள் காடுகளுக்கும், குடிமனைகளுக்கும் அலைந்து திரியும். எனவே விசர்நோய் ஏற்பட்ட விலங்குகளிடமிருந்து கடிபட்டு நோய் தொற்றிய நிலையில், மனிதருக்குக் கடித்து நோயினை ஏற்படுத்தும். நாய்களின் பெருக்கத்தைத் தடுப்பதற்கு கட்டாக்காலி நாயழிப்பு, வளர்ப்பு நாய்களைப் பாதுகாப்பாக கட்டி (கூண்டில் அடைத்து) வளர்த்தல், வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல், கர்ப்பத்தடை மருந்தூசிகள் ஏற்றல், கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை செய்தல் போன்றவற்றால் நீர்வெறுப்பு நோய் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

நாள்தோறும் மக்கள் நாய்க்கடி காரணமாக சிகிச்சைக்காக அலைகின்றனர். நீர் வெறுப்பு நோய்த் தடுப்பூசியின் விலை அதிகமானது.

இப்பணம் ஐம்பது பிறநோயாளருக்கான சிகிச்சைக்குப் போதுமானது. அரச மருத்துவ மனைக்கான ஆண்டின் மருந்து ஒதுக்கீட்டு நிதியில் நீர்வெறுப்பு நோய்க்கெனச் செலவாகும் நிதி அதிகமானது. இவற்றை அறிந்துகொண்டு மக்கள் நாய் ஒழிப்பிற்கும், வளர்ப்புமுறை அறிவித்தல்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புக்கடி

உலகில் உள்ள பாம்புகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. விசப்பாம்புகள் அல்லது நச்சுப்பாம்புகள்
2. விசம் அற்ற பாம்புகள் அல்லது நஞ்சு அற்ற பாம்புகள்.

மேலும் உலகில் 500 வகையான நச்சுப்பாம்புகள் காணப்பட்டாலும் கிட்டத்தட்ட 200 வகையானவையே மனிதனுக்கு ஆபத்தை உண்டு பண்ணுகின்றன. இலங்கையில் 92 வகையான நச்சுப்பாம்பு இனங்கள் காணப்பட்டாலும் பொதுவாக 5 இன விசப்பாம்புகளே மனிதனுக்கு ஆபத்தினை உண்டு பண்ணுகின்றன. விசப்பாம்புகள் மேலும் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

1. புடையன் பாம்பு [Viperidae]

   இதில் மேலும் 2 பிரிவுகள் உண்டு.

   1) Viperidae

      Eg:- கண்ணாடி விரியன் [Russell's viper]
      இவ்வகைப் பாம்புகள் அமெரிக்கா, பசுபிக், ஆசியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) Crotaline

Eg:- முத்திரைப் புடையன் [Pit viper]
இவ்வகைப் பாம்புகள் ஆசிய, அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.

2. நாகபாம்பு வகைகள் [Elapidae]

இதில் 8 அடி விரியன் [Grait]

நாகபாம்பு [Cobra]

பாரை பாம்பு [Coral snake]

போன்றன அடங்குகின்றன. இவ்வகைப் பாம்புகள் ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் காணபபடுகின்றன.

3. கடற்பாம்புகள் [Hydrophildae]

மேற்குறிப்பிட்ட நச்சுப்பாம்புகள் நச்சுப் பல்லைப் பாவித்துக் கடித்தாலும் கூட கடிபட்டவர்களில் 50% ஆனவர்களுக்கே விசம் உட்செலுத்தப்படுகின்றன. இலங்கையில் காணப்படுகின்ற விசப்பாம்புகளில் மனிதனுக்கு ஆபத்தை விளைவிக்கின்ற பாம்புகள்.

8 அடி விரியன்.

நாகபாம்பு [Cobra]

கண்ணாடி விரியன் [Russells viper]

சுருட்டைப் பாம்பு [Saw scaled viper]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பரி மூக்கன் [Hump nosed viper]

நாம் பாம்பினைத் தொடாவிட்டால் அல்லது சீண்டா விட்டால் ஒரு போதும் அது தேடி வந்து எம்மை கடிக்காது. சராசரியாக ஒரு பாம்பில் இருந்து மனிதன் ஒருவனுக்கு செலுத்தப்படும் விசத்தின் அளவு 30-60mg ஆகும். இவ்விசம் கிட்டத்தட்ட 20 மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. இதில் 90 வீதம் புரதங்கள் ஆகும். இப்பாம்பு விசத்தினை உட்கொள்வதினால் உடலில் எந்த விதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. அத்துடன் அனேகமான பாம்புகளின் விசங்கள் இரத்தத்தில் இருந்து மூளைக்குச் செல்வதும் இல்லை.

பாம்புக்கடியினால் ஏற்படும் சாவு வீதம் வயது வந்தவர்களில் ஆகக் கூடுதலாக 24 வீதமாகவும் சிறுவர்களில் 40 வீதமாகவும் உள்ளது. நச்சுப்பாம்புக் கடிக்கான சிகிச்சையை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் நாகபாம்புக் கடியினால் 10 வீதம் 24 மணித்தியாலங்களிலும், கடற்பாம்புக் கடியினால் 10 வீதம் 15 மணித்தியாலங்களிலும் சாவினை எதிர்கொள்கின்றனர். இலங்கையில் 60 வீதம் பாம்புக் கடியினை ஏற்படுத்தும் பாம்பு கண்ணாடி விரியன் ஆகும். [Russells viper]

மேலும் இலங்கையில் புடையன் பாம்புக் கடியினால் ஏற்படும் சாவு 2 வீதமாகவும் நாகபாம்புக் கடியினால் ஏற்படும் சாவு 5 வீதமாகவும் ஆகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண குணமடைதல் 95 வீதமாகவும் சிறு நீரகச் செயல் இழப்பு 4 வீதமாகவும் உள்ளது. இங்கு விசப்பாம்புகள் மனிதனுக்குக் கடிப்பதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை மூன்றாக வகுக்கலாம்.

1. இரத்தம் சம்பந்தமான பாதிப்புக்கள். [Haemotoxic effects]
2. நரம்பு சம்பந்தமான பாதிப்புக்கள். [Neurotoxic effects]
3. தசை சம்பந்தமான பாதிப்புக்கள் [Myotoxic effects]

இதில் பொதுவாகப் புடையன் வகை கடிப்பதனால் இரத்தம் சம்பந்தமான பாதிப்புக்களும் நாகபாம்பு கடிப்பதனால் நரம்பு சம்பந்தமான பாதிப்புக்களும் கடற்பாம்பு கடிப்பதனால் தசை சம்பந்தமான பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. ஆனால் எந்தவகைப் பாம்புக் கடியினாலும் மேற்குறிப்பிட்ட 3 வகைப் பாதிப்புக்களும் வரவாய்ப்பு உண்டு.

## 1. இரத்தம் சம்பந்தமான பாதிப்புக்கள்.

இங்கு விசம் இரத்தக் குழாயின் சுவரில் ஊடுருவும் தன்மையை அதிகரிப்பதனால் கடித்த இடத்தைச் சுற்றி வீக்கமும் கண்டலும் ஏற்படுகின்றது. அத்துடன் இரத்தம் இழையங்களுக்குள் கசிவடைவதால் இரத்தத்தின் கன அளவு குறைவடைந்து Hypovolumia வருகின்றது. மேலும் விசத்தில் உள்ள கிஸ்ரமின் [Histamine] கைனின் [Kinin] போன்ற பதார்த்தங்களினால் இரத்தக்குழாய்கள் விரிவடைகின்றன. இதனால் இரத்த அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகின்றது. [B.P] அத்துடன் இவ்விசம் குருதி உறையும் பொறிமுறையினைப் பாதிப்பதனால் குருதிச்சிறுதட்டுக்களின் ஒருங்கொட்டுதலையும் பைபிரின் [Fibrin] உருவாகுதலையும் குறைக்கின்றது. அத்துடன் குருதிக்குழாயின் உட்சுவரையும் பாதிக்கின்றது. இதனால் குருதி உறையும் தன்மை குறைவடைந்து குருதிக்கசிவு குறிப்பாக மூக்கு, முரசு, கடிவாய் போன்றவற்றில் இருந்து ஏற்படுகின்றது. சிலசமயம் இருமும் போது இரத்தமும் [Haemoptysis] சத்தி எடுக்கும் போது இரத்தமும் [Haematemesis] வரலாம். மேலும் சில சமயம் சலத்துடன் இரத்தமும் [Haemoturia] வரலாம்.

இங்கு விசமானது செங்குருதிக்கலங்களை அழிப்பதனால் அவை சிறுநீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்தி இழைய இறப்பு வரவாய்ப்புண்டு. [Renal tubular necrosis]

2.நரம்பு சம்பந்தமான பாதிப்புக்கள்.

இங்கு பாம்பு விசம் நரம்பிற்கும் தசைக்கும் இடையிலான சந்தியில் பாதிப்பினை ஏற்படுத்துவதனால் நரம்பிலிருந்து தசைகளுக்கு கணத்தாக்கம் கடத்தப்படுவது தடுக்கப்படுகின்றது. இதனால் முதலில் ஏற்படும் பாதிப்பு ptosis எனப்படுகின்ற கண் மடலை உயர்த்த முடியாமையாகும். அடுத்ததாக முகத்தசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாட்டை இழக்கும். இத்தாக்கம் படிப்படியாகக் கீழிறங்கி நெஞ்சில் உள்ள விலாஎன்பிடைத் தசையின் தொழிற்பாட்டைப்பாதிப்பதனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பின் சுவாசச்செயல் இழப்பு உண்டாகின்றது. மேலும் சக்தி மங்கிய பார்வை, உதடு விறைப்பு தலைச்சுற்று தலையிடி போன்றனவும் காணப்படலாம்.

3 தசை சம்பந்தமான பாதிப்புக்கள்

இப்பாதிப்புக்கள் பொதுவாக கடற்பாம்புகள் தீண்டுவதால் ஏற்படுகின்றன. இங்கு தலையிடி, நாக்குத்தடித்த மாதிரி ஓர் உணர்வு, தண்ணீர்த்தாகம், வியர்வை சத்தி ஆகியவற்றுடன் 3/4 மணித்தியாலங்கள் கழித்து உடல் முழுவதும் குத்துழைவு, தசைப்பிடிப்பு, தசைநோ ஆகியன ஏற்பட்டு இறுதியில் தசை செயல்இழப்புக்கூட ஏற்படலாம். இதனாலும் சுவாசம் தடைப்படும்.இங்கு தசைக்கலங்கள் சிதைவடைவதால் அதில் இருந்து வெளிப்படும் மயோக்குளோவின் [myoglobin] என்ற பொருள் இரத்தத்துடன் கலந்து இதயச்செயலிழப்பு சிறுநீரகச்செயலிழப்பு போன்றவற்றை ஏற்படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட 3 வகையான பாதிப்புக்களை விட ஒருவகை நாகம் [spitting cobra] விசத்தினைத் துப்புகின்றது. தற்செயலாக இப்பாம்பு படுக்கையில் உள்ள ஒருவரின் கண்ணுக்குள் துப்பினால் கண்ணின் கடுமையான வேதனை, கண்கூச்சம், கண்மடல் வீக்கம் கண்ணீர் வடிதல் போன்றவற்றுடன் சில சமயம் கருவிழியில் உரசல் காயங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படலாம். இதே போல் அவ்விசத்தை உடலில் எங்கு துப்பினாலும் அவ்விடத்தில் வீக்கம் எரிவு போன்றன ஏற்படலாம்.

மேலும் விசம் உடலினுள் இரத்தத்தில் கலக்கப்படுகின்றபோது பொதுவான அறிகுறிகளாக பயம், பதட்டம், தலைச்சுற்று, மூச்சுவிடச்சிரமம், வியர்வை போன்றன ஏற்படுகின்றன. அத்துடன் கடிவாயில் வேதனை வீக்கம் தொடும் போது வேதனை போன்றனவும் காணப்படும். மேலும் விசம் கடுமையாகக் கலந்திருந்தால் குமட்டலும் சத்தியும் காணப்படும்.

இலங்கையில் 8 அடி விரியன் கடித்தால் ஒரு மணித்தியாலத்திற்குள்ளேயே முதல் அறிகுறியாக நடுமேல் வயிற்றில் நோ [epigastric pain] ஏற்படுகின்றது.

நாகபாம்பு, புடையன்பாம்பு கடிகளிற்குக் கடிவாயில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பொதுவாக பாரதூரமற்றவை. எனினும் இழைய அழுகல் [Tissue necrosis] ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் கடற்பாம்பின் விசமானது கடிவாயிற்கு அருகில் உள்ள தசைகளில், தசை அழுகலை [mussle necrosis] ஏற்படுத்துகின்றது. சில சமயம் பாம்பு விசம் இரத்தத்தில் கலக்கும் போது ஒவ்வாமையை ஏற்படுத்துவதனால் ஒவ்வாமை அதிர்ச்சி [Anaphylactic shock] ஏற்படுகின்றது. இதன் அறிகுறிகளாகச் சத்தி, வயிற்றோட்டம், வியர்வை, காய்ச்சல், மூச்சுவிடச்சிரமம் நெஞ்சில் அந்தரம், மயக்கம் போன்றன ஏற்படுகின்றன. இவ்வாறான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாமையினால் சாவானது பாம்பு கடித்து 5 நிமிடங்களில் ஏற்படலாம். அல்லது பல மணித்தியாலங்கள் கழித்தும் ஏற்படலாம்.

பொதுவாகப் பாம்புக்கடிக்கு உள்ளான ஒருவர் சாவதற்கு முக்கிய காரணமாகச் சிறு நீரகச்செயலிழப்பு விளங்குகின்றது. பெரியவர்களுடன் ஒப்பிடும் போது சிறுவர்களில் பாம்பு விசத்தின் தாக்கம் மிகக்கடுமையாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக 02-10 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் சாவு வீதம் அதிகமாக இருப்பதாக ஆய்வுத்தகவல்கள் கூறுகின்றன.

முதலுதவி

1.கடிவாயை வெட்டி இரத்தத்தினை உறிஞ்சி விசத்தினை வெளியகற்றும் முறை முற்றிலும் தவறானது. மிகவும் ஆபத்தானது எனவே இதனைச்செய்தல் கூடாது.

2.கடிவாயின் மேல் இறுக்கமாக நாடாவினால் கட்டி விடுதலும் [விசம் மேலும் பரவாமல் தடுப்பதற்காக] மிகவும் ஆபத்தானது. எனவே இம்முறையும் பாவிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.கடிவாயினைச் சவற்காரம், நீர் கொண்டு கழுவி விட்டு அப்பகுதியை ஆடாமல், அசையாமல் வைத்திருப்பதற்காக [முறிவிற்குச் செய்வது போல] மட்டை வைத்துக்கட்டல் வேண்டும்.

4.வசதியாயின் கடித்த பாம்பினைக்கொன்று விட்டு அதனையும் மருத்துவமனைக்கு எடுத்து வரல் வேண்டும். இதனால் பாம்பினை இனம் கண்டு அதற்கேற்ப சிகிச்சை, பராமரிப்பு மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

5.மருத்துவமனைக்குக் கொண்டுவரும்போது நோயாளியைச்சரித்து படுக்கவைத்துக்கொண்டு வரல் வேண்டும்.

*நன்றி*
*விழி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவணக்கம்



மலர்வாய் 1984 - 10 - 03

மாவீரனாய் 2007 - 07 - 10

**வீரவேங்கை. முரசொலி [illegible]**

**தர்மதுரை அரிகரன் (கரன்)**

அரிகரன் வைத்தியசாலை, கொத்தம்பியாகுளம் [illegible]

**சம்பவம்:- 10.07.2007 அன்று [illegible] மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது.**



புன்னகைக்கும் உன் முகம் - கரன்
கலகலக்கும் உன் பேச்சு - கரன்
கண்ணெதிரே நீ நிற்கும்
கனிவான தோற்றமும் - என்றும்
கலையாத இன்பமாய் எம்முன்னே

குறும்பான கதைகள் சொல்லி
குதூகலித்து மகிழ்ந்து நாங்கள்
கும்மாளம் அடித்த எங்களுக்கு
உன் பிரிவு சொல்லி வாடித்துடிக்க...

அரி நீ எங்களுக்கு அரிதாகிவிட்டாய்
இல்லை அருகில் நீ வரமாட்டாயா?
நம்ப மறுக்கிறது எம் உள்ளம்
நண்பனாக சில வார்த்தை பேச- நீ வாடா

கொட்டிடும் தமிழ் முரசில்
கேட்டிடும் நாதமாகி - நீ
பெற்றிட்ட "முரசொலி" - நாமம்
எங்கெனும் கேட்குதடா

வையத்தில் - தமிழன் வரலாற்றில்
விடுதலையின் நெருப்பாற்றில்
நீ கொண்ட வேட்கையது
நிச்சயம் நிறைவேறும்
அப்போது உன் கல்லறையில்
வெற்றி முரசொலிக்குமடா - அதுவரை
நீ உறங்கு நிம்மதியாய் நீ- உறங்கு

நண்பர்கள்
யா/ மல்லாவி மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மல்க நன்றிகள்

எங்கள் அன்புச் செல்வம் அரிகரனின் வீரச்சாவு செய்தி அறிந்து நேரில் வருகை தந்து எம் துயரில் பங்கு கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும்

தமிழீழ சுகாதார சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் போராளிகளுக்கும்

சுகாதார திணைக்களம்,வைத்தியசாலையைச்சார்ந்த வைத்தியர்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும்

துணுக்காய் வலயக்கல்விப்பணிமனை உத்தியோகத்தர்கள் துணுக்காய் வலய பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களுக்கும்

மல்லாவி மத்தியகல்லூரி சமூகத்தினருக்கும்

ஏனைய அரச அரசசார்பற்ற அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும்

இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், தொலைபேசி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எம் உறவுகளுடன் துயர் பகிர்ந்தவர்களுக்கும்

பல வழிகளும் எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் வழங்கிய அனைவர்க்கும்

இம்மலரினை அச்சிட்டு தந்தவர்களுக்கும்

இன்றைய 41ம் நாள் நிகழ்வில் கலந்து சிறப்பித் தவர்களுக்கும்

கண்ணீர் மல்க எம் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*குடும்பத்தினர்*
*அரிகரன் வைத்தியசாலை*
*துணுக்காய்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org